**செய்தி வெளியீடு– 492** **நாள்–6.8.2007**

# செய்தி வெளியீடு

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத அளவில் தனது கட்டுமானத் திறனை 120 கோடியே 54 இலட்ச ரூபாய் அளவுக்கு உயர்த்தி, 2006–2007 ஆம் நிதி ஆண்டில் ஒரு கோடியே 25 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் நிகர லாபம் ஈட்டியுள்ளது.**

**இதில் அரசின் ஆதாயப் பங்குத் தொகையாக 50 இலட்ச ரூபாயை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கே.பி.ஜெயின், இ.கா.ப. இன்று (6.8.2007) வழங்கினார். தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., உள் துறைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, இ.ஆ.ப., தமிழ்நாடு காவல் துறைத் தலைவர் திரு. டி.முகர்ஜி, இ.கா.ப. ஆகியோர் உடனிருந்தனர்.**

*****

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.